செய்தி வெளியீடு எண்: 30 நாள்: 15.1.2009

# இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

## செய்திக் குறிப்பு நாள் 14.01.2009

பொருள்: தமிழ் புத்தாண்டு முதல் நாள் மற்றும் பொங்கல் திருநாள் விழா – தமிழகத் திருக்கோயில்களில் சிறப்புடன் நடைபெற்றது.

---

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் இன்று 14.01.2009 தமிழ் புத்தாண்டு முதல் நாள் மற்றும் பொங்கல் திருநாளினை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், சிறப்பு பூஜைகள், பக்தி இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழகத்தில் சென்னை, மதுரை, பழனி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், கன்னியாகுமரி மற்றும் இதர திருக்கோயில்களிலும் நடைபெற்றன. தமிழ் புத்தாண்டு சிறப்பு வழிபாடு மற்றும் பூஜையில் பெருமளவில் பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் இன்று காலையில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பூஜையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர்/ஆணையர், திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், அறநிலையத்துறை அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

சென்னை, வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு, மூலவரான வடபழனி ஆண்டவருக்கு தங்க காசுகள் பதித்த அங்கியுடன் கூடிய அலங்காரம் செய்யப்பட்டு, சன்னதிகள் மற்றும் திருக்கோயில் முழுவதும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

இணை ஆணையர்(தலைமையிடம்)
முதன்மை செயலர்/ஆணையருக்காக.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**